மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது, இது இனிமேல்தான் இந்த சர்க்கார் செய்ய வேண்டும் என்பதால், அதில் எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்திய சர்க்காருடைய ஆணைக்குட்பட்டு, சில இடங்களை ஸ்டாசுடரி ஏரியாவாகவும், மற்ற இடங்களில் இன்பார்மல் ரேஷன் என்றும் முன்னால் சர்க்கார் செய்திருந்தது. அதிலே பெரும்பகுதி மக்கள் கோயம்புத்தூரிலும், சென்னை நகரத்திலும் கிட்டத்தட்ட 30 லட்சம் மக்கள் வருகிறார்கள். அதில் பாரபட்சம் என்றோ அநியாயம் என்றோ எதுவும் இல்லை. நிர்வாகத்துக்குத் தக்கபடி, சில தகுதிகள், சில விதிமுறைகள் இவற்றை அனுசரித்து உட்படுத்தப்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சிற்றூர்ப் பகுதிகளுக்கு அரிசி கொடுக்க முடியாவிட்டாலும், கோதுமை, ரவை போன்றவற்றை வழங்க, ஒவ்வொரு ஊராட்சியிலும் நியாயவிலைக் கடை திறக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரிசியைவிட கோதுமை இன்னும் முயல் கொம்பாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பதினெட்டு வினாக்கள் இருக்கின்றன. அடுத்த வினா.

பால் அபிவிருத்தித் திட்டம்

* 229 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பால் அபிவிருத்திக்காக புதிதாக ஏதேனும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) and (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*230 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் இருக்கும் மொத்த மாடுகள் எத்தனை ?

---

* 632-637-ம் பக்கங்களில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1967 ஜூலை 10]

(இ) எத்தனை வகையான மாடுகள் பண்ணையில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: அதன் மூலம் கிடைக்கும் பாலின் மொத்த அளவு எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனிக் கேள்வி போடவும்

THIRU K. VINAYAKAM: On a point of order, Sir. The point of order is this. Whenever a question is tabled, we get an oral answer. But when a paper is circulated, if it is sent to us a day before, it will enable us to consume, assimilate and ask questions. Will the Hon. Speaker make arrangements to have it delivered at our residence?

MR. SPEAKER: I will permit the hon. Members to put supplementary questions, on this question, tomorrow.

புயல் நிவாரணம்

* 231 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு கடைசியில் அடித்த புயலின் காரணமாக ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு என்ன?

(இ) எத்தனை பேர்கள் மாண்டார்கள்? எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்?

(உ) அதற்கான நஷ்ட ஈடு ஏதேனும் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) (1) சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு—

முழுதும் சேதமடைந்த வீடுகளின் மதிப்பு ரூ. 2,35,28,300.

ஓரளவு சேதமடைந்த வீடுகளின் சேத மதிப்பு ரூ. 15,000.

(2) பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்—

பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு ரூ. 2,39,75,500.

(3) பொது மக்களின் பணிக்கென உள்ள வசதிகளுக்கு ஏற்பட்ட சேத மதிப்பு ரூ. 89,39,800.

(இ) (1) மாண்டவர்களின் எண்ணிக்கை 99.

(2) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,52,100.

(உ) (1) அரிசியும், உணவுப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கிய வகையில் ரூ. 49,100.

(2) அனுமதிக்கப்பட்ட ரொக்க மானியம் ரூ. 96,53,378.

(3) இலவசமாக துணிகள் வழங்கிய வகையில் ரூ. 91,600.

(4) கடன்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 15,54,000.

(5) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ. 3,68,355.

(6) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,33,578.

* 637–640 பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.